# யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்
# ஆணைக்கோட்டை

## நிறுவுனர் தினமும்
## வருடாந்த பரிசளிப்பு விழாவும்-2015

# Principal's Report
## அதிபர் அறிக்கை
22.07.2015

# யா/உடயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்
# ஆணைக்கோட்டை

## நிறுவுனர் தினமும்
## வருடாந்த பரிசளிப்பு விழாவும்

22.07.2015

அதிபரின் உள்ளத்தில் இருந்து..............

மகிழ்வான இந்த இனிய மாலை வேளையில் இந் நிகழ்வானது சிறப்புற நடைபெறுவதற்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் எல்லாம் வல்ல உத்துங்க விநாயகப்பெருமானை வணங்கி எமது மதிப்பார்ந்த ஸ்தாபகப் பெருமகன் அமரர் கைலாசபிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து இவ் அறிக்கையை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இன்றைய தினம் உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலையின் 2015 ம் ஆண்டிற்கான வருடாந்த பரிசளிப்பு விழாவிற்கு ஆசிகூற வருகை தந்திருக்கும் பெரும் மதிப்பிற்குரிய சிவஸ்ரீ க.குகதாசக்குருக்கள் ஐயா அவர்களே பிரதம விருந்தினர் கலாநிதி திருமதி இராசநாயகம் அவர்களே சிறப்பு விருந்தினர் உயர் திரு.S.சிவானந்தராஜா அவர்களே, கௌரவ விருந்தினர்களே நிறுவுனர் உரையாற்ற வந்திருக்கும் ஆ.சி JP கணேசவேல் அவர்களே, அயற்பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, இவ் விழாவை சிறப்பிக்க வந்திருக்கும் பெரியோர்களே, அன்பான பெற்றோர்களே, பழையமாணவர்களே, நலன் விரும்பிகளே, மாணவச் செல்வங்களே உங்கள் அனைவருக்கும் எனது இனிய மாலை வணக்கத்தை தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

ஆசிகூறி வாழ்த்த வருகை தந்து சிறப்பிக்கும் சிவசிறீ குகதாசக்குருக்கள் ஐயா அவர்கள் எமது பாடசாலையில் அக்கறையும் பெரும் ஈடுபாடும் கொண்டவர். உயர்ந்த சிந்தனையும் ஆன்மீக ஞானமும், அனுபவமும் நிறைந்த தங்கள் வருகையை இட்டு தங்களை வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இன்றைய நாளில் எமது அழைப்பை ஏற்று வருகை தந்திருக்கும் பிரதம விருந்தினர் யாழ் கல்வியியற் துறையில் சிரேஸ்ட விரிவுரையாளரும் முதுகல்விமானி இணைப்பாளரும் இலங்கை திறந்த பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவனம் ஆகியவற்றின் விரிவுரையாளருமான திருமதி ஜெயலட்சுமி இராசநாயகம் அவர்கள் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் B.A , PGDE , M.phil ஆகிய பட்டங்களைப் பெற்று இந்தியாவில் Ph.D பட்டத்தையும் பெற்றுள்ளார். தங்களது உயர்வான கல்விப் பணியை நாம் அறிவோம். இன்றைய

காலச் சூழலில் உயர் கல்வியைப் பெற ஆவலுடன் இருக்கும் கல்விச் சமுதாயத்தின் ஒளியாக தாங்கள் உயர்கின்றீர்கள். கல்விச் சமுதாயத்திற்கு தாங்கள் ஆற்றும் பணி மகத்தானது, புனிதமானது. தங்களது உள்ளத்தில் தோன்றி உதடுகளினால் வெளிவரும் வார்த்தைகள் தாங்கள் கல்வி மீது செலுத்தும் அக்கறையையும், அர்ப்பணிப்பையும் கண்ணாடி போல் வெளிக்காட்டுகின்றது.. தங்களின் சமுதாயக் கல்வி, கல்வியின் சமூகவியல், கல்வித்தத்துவம், குழந்தை உளவியல், பொது நிதி, அலுவலக முகாமைத்துவம் ஆகிய நூல்கள் கல்விச் சமுதாயத்திற்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. கல்வியிலே உயர்ந்து நின்று அன்பும் பண்பும் அடக்கமும் மிகுந்த தாங்கள் எனது குருவாக இருந்து முதுகல்விமாணிப் பட்டம் பெறவும், ஆய்வுக் கட்டுரை வழிகாட்டியாகவும் எனக்கு கிடைத்தமை நான் செய்த அரும் பாக்கியம் என்றே கூற வேண்டும். கல்வியில் உயர் நிலையில் நிற்கும் தாங்கள் இந் நிகழ்விற்கு வருகை தந்து சிறப்பிப்பதையிட்டு எமது பாடசாலைச் சமுதாயம் தங்களை வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறது.

அடுத்து சிறப்பு விருந்தினராக வருகை தந்துள்ள சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளர் உயர்திரு S.சிவானந்தராஜா அவர்கள் சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலைகள் அனைத்திலும் மிகுந்த அக்கறை கொண்டவர். அதிபர்களை அன்பினாலே ஆள்பவர். சிறந்த கலையார்வம் மிக்கவர். மிகுந்த பண்பாளர். சிறந்த நிர்வாகி, ஆலோசனை வழங்குவதில் உயர்ந்து நிற்பவர். கடமையில் கண்ணியம் மிக்கவர். இப்படிப்பட்ட சிறந்த குணங்களையுடைய தாங்கள் எமது பாடசாலைக்கு வருகை தந்தமையை இட்டு வருக வருக என வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

அடுத்து கௌரவ விருந்தினர்களர்க வருகைதந்துள்ள ஓய்வு பெற்ற அத்திகட்சரும் சாயி சமுர்த்தி தலைவருமான உயர்திரு S.சிவனேஸ்வரன் அவர்கள் எமது பாடசாலையில் மிகுந்த அக்கறை கொண்டு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் நற்சிந்தனைகளை மாணவர்களுக்கு வழங்கி வருகிறார். ஆத்துடன் 6 – 9 வகுப்பு மாணவா'களுக்கு மாலை நேரத்தில் மனித மேம்பாட்டுக் கல்வியை நடத்தி கற்றல் உபகரணங்களையும் வழங்கியுள்ளார். மிகுந்த அன்பும்,

பண்பும் இறைபக்தியும் உடைய தாங்கள் வருகைதந்தமையையிட்டு வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

வாசுகி முன்பள்ளித் தலைவர் உயர்திரு ஸ்ரீரஞ்சன் அவர்கள் முன்பள்ளி மாணவர்களின் கல்வியைத் தரமாக வழங்கி எமது பாடசாலைக்கு மாணவர்களை வழங்குவதற்கு மிகுந்த அக்கறையுடன் இருக்கிறார். எமது பாடசாலையில் 2016ம் ஆண்டு முதல் தரம் 1 இல் சேரும் மாணவர்களுக்கு விசேட வகுப்பை நடத்த எண்ணியுள்ளார். எமது பாடசாலை வளர்ச்சியில் மிகுந்த அக்கறையுடையவர். இச் சந்தர்ப்பத்தில் அவர்களையும் வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

அடுத்து வெஸ்ரா இண்டஸ்ரி உரிமையாளர் உயர்திரு அ.வாகீசன் அவர்கள் விளையாட்டுப் போட்டியானாலும், பரிசிளிப்பு விழாவாக இருந்தாலும் எமது பாடசாலைக்கு தேவையான குளிர்பானத்தை வழங்கிவருகின்றவர். மிகுந்த பண்பாளர். எமது பாடசாலை மீது மிகுந்த அக்கறையுள்ளவர். ஆப்படிப்பட்ட தங்களையும் வரவேற்பதில் மகிழ்வடைகின்றோம்.

நிறுவுனர் தின உரையாற்ற வருகை தந்து சிறப்பிக்கும் ஆ.சி.கணேசவேல்(**J.P**) அவர்களையும் அன்புடன் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இவ்விழாவிற்கு வருகைதந்து சிறப்பிக்கும் ஸ்தாபகர் குடும்பத்தினரையும் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிள்றேன்.

அடுத்து எமது பாடசாலையில் சிறந்த முறையில் சேவையாற்றியதோடு பல பௌதீக வளங்களை பெற்றுக்கொடுத்து பதவி உயர்வு பெற்று தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு சென்ற அன்பிற்குரிய அதிபர் உயர்திரு நா.தனபாலசிங்கம் அவர்களையும் அன்புடன் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இளைப்பாறிய ஆசிரியர்

எமது பாடசாலையில் நிறைவான சேவையை மிகுந்த அர்ப்பணிப்புடன் வழங்கி ஓய்வு பெற்ற எமது தமிழ் பாடஆசிரியரும், பிரதிஅதிபருமான திருமதி யோ.இரத்தினராஜா அவர்களின் சேவையை நினைவு கூர்ந்து அவர்களின் ஓய்வுக்காலம் சிறக்க எமது பாடசாலைச் சமூகம் வாழ்த்துகின்றது.

இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர்கள்

எமது பாடசாலையில் தமது சேவையை அரப்பணிப்போடு வழங்கி வந்த திருமதி தர்மளா சாயீஸ்வரன், திருமதி ஜீவப்பிரியா சுபாகரசர்மா இவர்களின் இடமாற்றம் பாடசாலைச் சமூகத்திற்கு மிகுந்த கவலையளிக்கிறது. ஆயினும் சென்ற இடத்தில் சிறப்பாக செயற்பட வாழ்த்துகிறோம்.

புதிதாக இணைந்த ஆசிரியர்

எமது பாடசாலைக்கு இவ்வருடம் புதிதாக இணைந்த ஆசிரியராக திருமதி பன்னீர்ச்செல்வி சந்திரருபன் வருகைதந்துள்ளார். இவர் எமது பாடசாலையின் கள நிலமைக்கமைய தனது சேவையை சிறப்பாக வழங்க முன்வந்துள்ளார். இவரைப் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

மாணவ முதல்வர்கள்

எமது பாடசாலையின் மாணவ முதல்வர்கள் ஒழுங்கையும், பாடசாலையின் பௌதீக வளங்களையும் சிறப்பாக கண்காணித்தல் எமது பாடசாலை முதல்வர்களின் கடமையாகவுள்ளது. அத்துடன் அவர்களுக்கு வழங்கப்பட்ட கடமைகளையும் பொறுப்புகளையும் சிரேஸ்ட மாணவத்தலைவரின் தலைமையில் அதிபர் ஆசிரியர்களின் வழிகாட்டலுடன் சிறப்பாகச் செய்து வருகின்றனர்.

இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளாக விளையாட்டுப்போட்டி, தமிழ்த்தினப்போட்டி, ஆங்கில தினப்போட்டி, சமூகவிஞ்ஞானப்போட்டி, கணிதவிஞ்ஞானப்போட்டி, வினாடிவினாப்போட்டி, அனர்த்த முகாமைத்துவப்போட்டி மற்றும் ஆரம்பப் பிரிவுக்கான சித்திரம், திருக்குறள், பண்ணிசை, துரிதகணிதம், வாய்ப்பாடு மனனப்போட்டி, சிங்களம், மற்றும் நாடகம் போன்ற போட்டிகளில் பங்குபற்றி குடும்பமட்டம் கோட்டமட்டம், வலயமட்டம் போன்றவற்றில் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது. இவ்வருடம் தமிழ்த்தினப் போட்டியில் வில்லுப்பாட்டு 1ம் இடத்தையும் நடனம் 3ம் இடத்தையும் கோட்ட மட்டத்தில் பெற்றுள்ளது. ஆங்கில உறுப்பெழுத்து கோட்டமட்டத்தில் 2ம் இடத்தையும் வலயமட்டத்தில் 3ம் பெற்றுள்ளனர். இவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்களுக்கு வாழ்த்துகளும் நன்றிகளும்.

மன்றங்கள்

மாணவர்களிடம் மறைந்திருக்கும் ஆளுமைப் பண்புகளை வெளிக்கொண்டு வரும் மன்றங்களாக மாணவர் மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன. அந்தவகையில் 1 – 5 ஆரம்பக் கல்வி மன்றமும் 6,7,8,9 பாடரீதியான மன்றங்கள் தனித்தனியே செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இம் மன்றங்கள் சகல மாணவர்களையும் பங்குபெறச் செய்து அவர்களது திறமைகளை வெளிக்கொண்டு வருகின்றன.

மன்றப் பொறுப்பாசிரியர்கள்

1. ஆரம்பக் கல்வி மன்றம் - திருமதி ஜெ.சந்திரசிறி
2. இந்து மன்றம் - திருமதி ப.சந்திரருபன்
3. தமிழ் மன்றம் - திருமதி ப.சந்திரருபன
4. ஆங்கில மன்றம் - திருமதி வ.செல்வரஞ்சன்
5. கணித, விஞ்ஞான, சுகாதார உளநல மன்றம் – திருமதி S.சாந்தகுமார்
6. சமூக விஞ்ஞான மன்றம் - திருமதி செ.ஜெயக்குமார்

**பாடசாலைத் தேவைகள்**

1. 300 நீளமான மதில்
2. 100 பிளாஸ்ரிக் கதிரை
3. மல்ரி மீடியா
4. புகைப்படக் கமெரா
5. மாணவர்களுக்கு பால் (104 மாணவர்கள்)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் புள்ளிப் பகுப்பாய்வு

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|---|---|
| விண்ணப்பித்தோர் | 7 | 8 | 4 | 13 | 13 | 09 | |
| தோற்றியோர் | 7 | 8 | 4 | 12 | 10 | 09 | |
| சித்தியடைந்தோர் | | | | | | | |
| கூடிய புள்ளி | 89 | 98 | 84 | 123 | 100 | 116 | |
| குறைந்த புள்ளி | 47 | 54 | 45 | 42 | 52 | 49 | |
| 00 – 40 | | | | | | | |
| 41 – 50 | 1 | 1 | 3 | | | 1 | |
| 51 – 60 | 3 | 1 | | | 2 | 1 | |
| 61 – 70 | | 1 | | | 3 | | |
| 71 – 80 | 1 | 5 | | | 1 | 2 | |
| 81 – 90 | 2 | | 1 | 1 | 1 | 1 | |
| 91 – 100 | | 1 | | | 3 | | |
| 101 – 110 | | | | 1 | | 2 | |
| 111 – 120 | | | | | | 2 | |
| 121 - 130 | | | | 1 | | | |

ஞாபகார்த்தப் பரிசில்கள்

அமரர் சுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக திருமதி பராசக்தி சுப்பிரமணியம் அவர்களால் உருவாக்கப்பட்ட புலமைப்பரிசில் நிதியம் இனிவரும் காலங்களில் புலமைப்பரிசில் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு இடைநிலைக் கல்விக்குரிய நிதியமாக வழங்க முன்வந்திருக்கும் ஆசிரியருக்கும் அவரது பிள்ளைகளுக்கும் எனது வாழ்த்துக்கள்.

அமரர் கைலாயப்பிள்ளை ஞாபகார்த்தமாக பரிசளிப்பு விழாவிற்கு வருடம் தோறும் உதவியைப் பெற்றுத்தரும் திரு,திருமதி ஜெயபாலன் குடும்பத்திற்கும் எனது வாழ்த்துக்கள்.

இல்ல மெய்வல்லுனர் போட்டியை வருடம் தோறும் சிறப்பாக நடாத்த அமரர் சரஸ்வதி சுப்பிரமணியச் செட்டியர் ஞாபகார்த்த நிதி வருடாந்தம் வழங்கும் அவரது மகன் திரு.குகன் செட்டியார் அவர்களுக்கும் எனது வாழ்த்துக்கள்.

வருடாந்தம் தரம் 1 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் கால்கோள் விழாவிற்கு பரிசுகளும் வழங்கிவரும் பழையமாணவர் வைத்தியர் **N**.சிவபாலன் தம்பதியினருக்கும் எனது வாழ்த்துக்கள்.

மேலும் இவ்வாண்டு சத்தியசாயி சமித்தி அமைப்பினர் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளமையும் பெரும் உதவியாக இருந்தது. அவர்களுக்கும் எனது வாழ்த்துக்கள்.

| பெயர் | தரம் | பதவி | தகைமை |
| --- | --- | --- | --- |
| திருமதி அம்பிகை சிவஞானம் | SLPS 2-II | அதிபர் | B.A , PGDE, M.Ed |
| திருமதி சிவாசினி சாந்தகுமார் | SLTS 2-II | உப அதிபர் | B.sc, PGDE |
| திருமதி வசந்தாதேவி செல்வரஞ்சன் | SLTS 2-I | ஆசிரியர் | English Trained |
| திருமதி ஜெயக்குமாரி சந்திரசிறி | SLTS 2-I | ஆசிரியர் | B.com, Primary Trained, PGDE |
| திருமதி சுகிர்தா குணேந்திரராஜா | SLTS 2-II | ஆசிரியர் | B.com, PGDE |
| திருமதி செந்தினி ஜெயக்குமார் | SLTS 2-II | ஆசிரியர் | B.A(Hons), PGDE |
| திரு கைலாயப்பிள்ளை உதயகாந்தன் | SLTS 2-II | ஆசிரியர் | B.sc(Ed) |
| திருமதி லதாவதி பத்மநாதன் | SLTS 2-II | ஆசிரியர் | B.A, Maths Trained, PGDE |
| திருமதி பன்னீர்ச்செல்வி சந்திரருபன் | SLTS 2-II | ஆசிரியர் | B.A, PGDE |
| திருமதி தமயந்தி வரதராஜ் | SLTS 3-I | ஆசிரியர் | BFA (Music) |
| திருமதி தனலட்சுமி காசிநாதன் | SLTS 3-I | ஆசிரியர் | B.A. PGDE |
| திருமதி தயாளினி முருகானந்தன் | SLTS 3-I | ஆசிரியர் | NDIT , Primary Trained |
| திருமதி யாழினி சோதீஸ்வரன் | SLTS 3-I | ஆசிரியர் | BFA (Music) |
| திருமதி சிவமலர் மகேஸ்வரன் | SLTS 3-I | ஆசிரியர் | Science Trained |
| திருமதி சங்கரப்பிள்ளை தயானந்தன் | SLTS 2-I | ஆசிரியர் | Art Trained |

பரிசளிப்புவிழாவிற்கு அனுசரணை வழங்கியோர்

1. அமரர் கைலாசபிள்ளை ஞாபகமாக அவரது பிள்ளைகள் –15000.00
2. திருமதி ச.ஸ்ரீகாந்தன் (முன்னாள் அதிபர் அமரர் ஸ்ரீகாந்தன் ஞாபகமாக) –5000
3. இலங்கை வங்கி மானிப்பாய் – 5000.00
4. **HNB** மானிப்பாய் – 5000.00
5. திருமதி யோ.இரட்னராஜா(ஓய்வுபெற்ற உபஅதிபர்) – 2000.00
6. திரு **A.V** கணேசலிங்கம் – 1000.00
7. செல்வி றேனுகா மார்க்கண்டு – 1000.00
8. திரு நா.செல்வச்சந்திரன் – 1000.00
9. திரு ஆ.சி.கணேசவேல் –500.00
10. திருமதி சாரதாதேவி பூபாலசிங்கம் – 500.00
11. திருமதி **S.** பாலாம்பிகை – 500.00
12. திருமதி ஜெயக்குமார் சரளா -- 500.00
13. சத்தியசாயி நிலையம் - கற்றல் உபகரணம்
14. **NSB** மானிப்பாய் - கற்றல் உபகரணம்
15. அன்னை புத்தகசாலை - கற்றல் உபகரணம்

ஆரம்பப்பிரிவு

| இல | பெயர் | பாடங்கள் | நிலை |
|---|---|---|---|
| | தரம் - 1 | | |
| 1. | இ.விபுசனா | சமயம், சுற்றாடல் | 1ம் இடம் |
| | | தமிழ், | 2ம் இடம் |
| | | கணிதம் | 3ம் இடம் |
| 2. | ஜெ.டெனிஸ்ரா | தமிழ், கணிதம் | 1ம் இடம் |
| | | சமயம், சுற்றாடல் | 3ம் இடம் |
| 3. | சு.யதுசன் | சமயம், சுற்றாடல், கணிதம் | 2ம் இடம் |
| | | தமிழ் | 3ம் இடம் |
| | தரம் - 2 | | |
| 1. | ப. யசோதாயினி | சமயம், தமிழ், சுற்றாடல் | 1ம் இடம் |
| | | கணிதம் | 3ம் இடம் |
| 2. | பா.மௌசாயினி | கணிதம் | 1ம் இடம் |
| | | சமயம், தமிழ் | 2ம் இடம் |
| 3. | ற.சொப்னா | சுற்றாடல், கணிதம் | 2ம் இடம் |
| | | சமயம், தமிழ் | 3ம் இடம் |
| 4. | சு.தேனுஜன் | சுற்றாடல் | 3ம் இடம் |
| | தரம் - 3 | | |
| 1. | த.பிருத்திகா | சமயம், சுற்றாடல், கணிதம், | 1ம் இடம் |
| | | ஆங்கிலம் | 2ம் இடம் |
| | | தமிழ் | |
| 2. | ஜீ.நேருஜா | | 1ம் இடம் |
| | | தமிழ் | 2ம் இடம் |
| | | சமயம், சுற்றாடல், ஆங்கிலம் | 3ம் இடம் |
| | | கணிதம் | |
| 3. | ப.சந்தியா | | 2ம் இடம் |
| | | கணிதம் | 3ம் இடம் |
| | | தமிழ் | |
| 4. | க.யதுர்சன் | | 2ம் இடம் |
| | | ஆங்கிலம் | 3ம் இடம் |
| | | சுற்றாடல் | |
| 5. | ரா.சந்தியா | | 3ம் இடம் |
| | | சமயம் | |
| | தரம் - 4 | | |

| | | | |
|---|---|---|---|
| 1. | வ.திவ்யா | சமயம், தமிழ், ஆங்கிலம்<br>சுற்றாடல், கணிதம் | 1ம் இடம்<br>2ம் இடம் |
| 2. | இ.மதுசா | கணிதம்<br>சமயம், தமிழ், ஆங்கிலம் | 1ம் இடம்<br>2ம் இடம் |
| 3. | ம.மதிர்சன் | சுற்றாடல்<br>கணிதம், தமிழ், ஆங்கிலம் | 1ம் இடம்<br>3ம் இடம் |
| 4. | அ.கஜித்குமார் | சுற்றாடல் | 3ம் இடம் |
| 5. | இ.வித்தியா | சமயம், தமிழ் | 3ம் இடம் |
| | தரம் - 5 | | |
| 1. | பி.தேவயாழினி | சமயம், தமிழ், ஆங்கிலம்<br>சுற்றாடல், கணிதம் | 1ம் இடம்<br>2ம் இடம் |
| 2. | கோ.அபினாஷ் | கணிதம்<br>தமிழ், ஆங்கிலம்<br>சுற்றாடல், சமயம் | 1ம் இடம்<br>2ம் இடம்<br>3ம் இடம் |
| 3. | பா.பானுசன் | சுற்றாடல்<br>சமயம்<br>கணிதம், தமிழ் | 1ம் இடம்<br>2ம் இடம்<br>3ம் இடம் |
| 4. | ர.தமயந்தி | ஆங்கிலம் | 3ம் இடம் |
| 1 | தரம் - 6 | | |
| | த.தட்சாயினி | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு ,சுகாதாரம், நடனம் | 1ம் இடம் |
| | | புவியியல், தொழில்நுட்பம் | 2ம் இடம் |
| | | குடியுரிமை | 3ம் இடம் |
| 2. | சி. தர்சிகா | சமயம், கணிதம், குடியுரிமை, சுகாதாரம், சங்கீதம் | 2ம் இடம் |
| | | வரலாறு, புவியியல் | 3ம் இடம் |

| | | | |
|---|---|---|---|
| | | குடியுரிமை, சங்கீதம் | |
| 3. | சு. லக்சிகா | விஞ்ஞானம், ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | சமயம், கணிதம், தமிழ், தொழினுட்பம் | 2ம் இடம் |
| | | | 3ம் இடம் |
| 4. | ர. சந்தோஷ் | புவியியல், தொழினுட்பம், சித்திரம் | 1ம் இடம் |
| | | தமிழ், வரலாறு | 2ம்இடம் |
| | | விஞ்ஞானம், ஆங்கிலம், சுகாதாரம் | 3ம் இடம் |
| 5. | வ. சிவாசினி | சங்கீதம் | 3ம் இடம் |
| 6. | ச. டெனிக்சன | சித்திரம் | 2ம் இடம் |
| 7. | ஜெ. சிறீகஜன் | சித்திரம் | 3ம் இடம் |
| | தரம் - 7 | | |
| 1 | ஜெ.நாகலக்சன் | சமயம், தமிழ், கணிதம், வரலாறு, புவியியல், சுகாதாரம், தொழில்நுட்பம் | 1ம் இடம் |
| | | சங்கீதம் | 2ம் இடம் |
| | | விஞ்ஞானம், ஆங்கிலம், குடியுரிமை | |
| 2 | த.சஞ்சீவன் | | 1ம் இடம் |
| | | விஞ்ஞானம், ஆங்கிலம், குடியுரிமை | 2ம் இடம் |
| | | சமயம், தமிழ், கணிதம், வரலாறு, புவியியல், சுகாதாரம், தொழில்நுட்பம் | |
| 3 | செ.பவிதா | சங்கீதம் | 1ம் இடம் |
| | | நடனம் | 3ம் இடம் |
| 4 | பா.அபிராசஜ் | சமயம், தமிழ், கணிதம், வரலாறு, புவியியல், குடியுரிமை, தொழில்நுட்பம் | 1ம் இடம் |
| | | | 3ம் இடம் |
| 5 | வ.வைஷ்ணவி | சித்திரம் | 2ம் இடம் |
| | | தமிழ் | 3ம் இடம் |

| | | | |
|---|---|---|---|
| 6 | இ.தனுஸ்ரன் | நடனம் | 3ம் இடம் |
| 7 | ச.விதுசன் | விஞ்ஞானம் | 3ம் இடம் |
| 8 | க.தர்மினி | ஆங்கிலம் | 3ம் இடம் |
| 9 | மோ.டிலக்சனா | சுகாதாரம் | 3ம் இடம் |
| 10 | பு.சாருஜன் | சங்கீதம் | 2ம் இடம் |
| | ப.கேசவந்தன் | நடனம் | 3ம் இடம் |
| | | சித்திரம் | |
| | | சித்திரம் | |
| | தரம் - 8 | | |
| 1 | அ.வான்மதி | சமயம், தமிழ், கணிதம், வரலாறு, குடியுரிமை, தொழில்நுட்பம், சங்கீதம் சுகாதாரம், ஆங்கிலம், விஞ்ஞானம் | 1ம் இடம் |
| | | புவியியல் | 2ம் இடம் |
| 2 | கெ.மீனா | புவியியல் | 1ம் இடம் |
| | | வரலாறு, குடியுரிமை, சமயம் | 2ம் இடம் |
| | | தொழில்நுட்பம், சுகாதாரம் | 3ம் இடம் |
| 3 | ஜெ.கஜீஷவன் | சித்திரம் | 1ம் இடம் |
| | | தொழில்நுட்பம், சுகாதாரம் | 2ம் இடம் |
| | | குடியுரிமை, சமயம் | 3ம் இடம் |
| 4 | தே.அன்ரன் றொபேட் | ஆங்கிலம், விஞ்ஞானம், தமிழ், | 2ம் இடம் |
| | | சங்கீதம் | 3ம் இடம் |
| 5 | ஜெ.அனுஜன் | கணிதம், வரலாறு, புவியியல் | 2ம் இடம் |
| 6 | சி.அய்ந்தன் | கணிதம் | 3ம் இடம் |
| 7 | அ.டினேஸ் | விஞ்ஞானம் | 2ம் இடம் |
| 8 | த.மதுசிகா | சித்திரம் | 3ம் இடம் |
| 9 | ஜெ.சங்கீதா | சங்கீதம், ஆங்கிலம் | 3ம் இடம் |
| | | தமிழ் | |
| | தரம் - 9 | | |
| 1 | வி.சோனியா | சமயம், தமிழ், கணிதம், வரலாறு, குடியுரிமை, தொழில்நுட்பம், சங்கீதம் | 1ம் இடம் |

| | | | |
|---|---|---|---|
| | | சுகாதாரம், ஆங்கிலம்<br>விஞ்ஞானம், புவியியல் | <br>2ம் இடம் |
| 2 | ர.தனுசன் | விஞ்ஞானம்<br>சமயம், கணிதம், வரலாறு,<br>குடியுரிமை,<br>சுகாதாரம்<br>தொழில்நுட்பம், ஆங்கிலம், புவியியல் | 1ம் இடம்<br>2ம் இடம்<br><br>3ம் இடம் |
| 3 | சி.சாந்தருபினி | <br>சங்கீதம், ஆங்கிலம் | 2ம் இடம்<br>2ம் இடம் |
| 4 | ம.கஜீபன் | தமிழ், கணிதம், வரலாறு,<br>விஞ்ஞானம்<br><br>புவியியல்<br>தொழில்நுட்பம், சித்திரம், தமிழ் | 1ம் இடம்<br>2ம் இடம்<br>3ம் இடம் |
| 5 | த.அனுஸ்ரன் | சுகாதாரம், சமயம் | 3ம் இடம் |
| 6 | ஞா.ரதுஜா | குடியுரிமை, சித்திரம் | 3ம் இடம் |
| 7 | இ.விஜிதரன் | சுங்கீதம்<br><br>சித்திரம் | 1ம் இடம் |

விசேட பரிசு பெறுவோர் விபரம்

சித்திரப்போட்டி (குடும்ப மட்டம்)

1. இ.விபுசனா – தரம் 2 – 2ம் இடம்

2. ற.சொப்னா – தரம் 3 - 2ம் இடம்

விரைவு கணிதம் (குடும்ப மட்டம்)

1. த.பிருத்திகா – தரம் 4 - 2ம் இடம்

ஆங்கில உறுப்பெழுத்து (வலய மட்டம்)

1. ஜே.நாகலக்சன் - தரம் 7 - 3ம் இடம்

ஆங்கில உறுப்பெழுத்து (கோட்ட மட்டம்)

1. ஜே.நாகலக்சன் - தரம் 8 - 3ம் இடம்

தமிழ்த் தின போட்டி (கோட்ட மட்டம்)

1. வில்லிசை – குழு 1ம் இடம்

2. மோ.டிலக்சனா – தரம் 8 - 3ம் இடம்

தரம் - 1 (விசேட பரிசு 2015)

1. இ.லோகிதன்
2. ஸ.தஸ்வின்
3. அ.அபிலாஸ்
4. வ.சுகிர்தன்
5. சோ.சூானுயன்
6. நி.சஞ்சை
7. ஜெ.பஸ்மிலா
8. சு.கபினயா
9. நா.கலைவேந்தி
10. ம.மதுசாளினி
11. தி.திவ்யா
12. க.கம்சா

அமரர் சுப்ரமணியம் அவர்களின் ஞாபகார்த்தப் பரிசு 2014 தரம் 5 பரீட்சையில் 100 புள்ளிக்கு மேல் பெற்றோர்

1. பி.தேவயாளினி
2. கோ.அபிலாஸ்
3. சு.சுயிகரன்
4. ப.பானுயன்

70 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர்

1. ர.தமயந்தி
2. க.யதுர்சன்
3. சி.சிலோயா

ஒரு வருடத்தில் பத்திற்கு குறைவாக லீவு பெற்றோர்

திருமதி அ.சிவஞானம்
திருமதி ஜெ.சந்திரஸ்ரீ
திருமதி செ.ஜெயக்குமார்

மாணவர்களின் ஒழுங்கான வரவு

| பெயர் | தரம் |
|---|---|
| இ.லோகிதன் | 1 |
| ஸ.தஸ்வின் | 1 |
| ஞா.நர்மிகா | 4 |
| வ.திவ்யா | 5 |
| நா.நதீபன் | 8 |

இந்த வருடம் தொடக்கம் தரம் 4 தரம் 5 ஆகிய வகுப்புக்களுக்கு எமது பாடசாலையின் பழைய மாணவியும், இலண்டனில் வசிப்பவருமாகிய விஜயலதா கணிதம், தமிழ், சுற்றாடல் ஆகிய பயிற்சிப் புத்தகங்களை இலவசமாக வழங்கியுள்ளார். அத்துடன் தரம் 5ல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தினக்குரல் பயிற்சி வினாக்களைப் பெற உதவியுள்ளார். இவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களும் நன்றிகளும்.

நன்றியுரை

எமது பாடசாலை அழைப்பை ஏற்று வருகை தந்து சிறப்பித்த பிரதம விருந்தினர் கலாநிதி (திருமதி) ஜெயலட்சுமி இராசநாயகம் அவர்களுக்கும் சிறப்பு விருந்தினராக வருகைதந்திருக்கும் சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு சிவானந்தராஜா அவர்களுக்கும், கௌரவ விருந்தினர்களாக வருகைதந்திருக்கும் உயர்திரு S.சிவனேஸ்வரன், உயர்திரு S.ஸ்ரீரஞ்சன், உயர்திரு சு.வாகீசன், திருமதி விஜயலதா குடும்பத்திற்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

எமது அழைப்பை ஏற்று இங்கு வந்து சிறப்பித்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

எமது பாடசாலையின் செயற்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் வழிகாட்டல்களையும் பங்களிப்புகளையும் வழங்கும் வலயக்கல்விப்பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

எனது கடமையில் பங்கேற்று கடமையாற்றிவரும் உபஅதிபர், பாடஇணைப்பாளர், பகுதித்தலைவர், பாடஇணைப்பாளர், அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கும் நன்றிகூறி மிக மகிழ்வுடன் அறிக்கையை நிறைவு செய்கிறேன்.

22.07.2015

திருமதி.அ.சிவஞானம்
அதிபர்

## பாடசாலைக் கீதம்

உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை வாழ்கவே
உத்துங்க விநாயகர் அருள்என்றும் பெருகவே
வாழ்கவே வாழ்கவே வாழ்கவே

ஆயிரத்து தொளாயிரத்து அறுபதாம் ஆண்டில்
அன்பர் மூவர் செய்த நல்ல பெருமுயற்சியால்
தூய எங்கள் சைவநெறி துலங்கிட வேண்டும்
தொடங்கினால் ஊரறிதன சுடர்விட்டோங்கவே
வாழ்கவே வாழ்கவே வாழ்கவே

கல்வி கலை பண்பாடு கற்போமிங்குநாம்
கடமையினை கண்ணெனவே மதிப்போமிங்கு நாம்
உண்மை அன்பு உழைப்பு என்ற உத்தம கொள்கை
உணர்ந்து உயர்ந்திடுவோமே ஒழுக்க சீலராய்
வாழ்கவே வாழ்கவே வாழ்கவே

ஊதா மஞ்சள் நிறக் கொடியும் இங்கு உயரப்பறக்குதே
உழைப்பு செழிப்பு இரண்டினையும் எடுத்துக்காட்டுதே
போதனையும் சாதனையும் இணைந்து இருக்குதே
பொருத்தமான கல்வி பெறவாய்ப்புக் கிட்டுதே
வாழ்கவே வாழ்கவே வாழ்கவே

நாடுவாழத் தமிழ்வாழ நம்மவர் வாழ
நமக்குக் கல்வி ஊட்டும் வித்தியாசாலை வாழ்கவே
ஏடுதூக்கி நிற்கின்ற எங்களையெல்லாம்
இந்த நாட்டின் தலைவராக்கும் அன்னை வாழ்கவே
வாழ்கவே வாழ்கவே வாழ்கவே

(உயரப்புலம் குணபாலன்.....)